கார்கால மழையே கருமுகில் திரளே
ஈர விழிகளின் துளிகள் தெரிகிறதா 2 எம்
தாயதுளிர்கள் போனது எங்கே
தரிசனம் காண தேடுகின்றோம் 2

வீதிகள் தோறும் கருமை ஒளி
வெளிதேடல்கள் எல்லாம் இருளில் ஒளி 2
தாய் நிலம் தொலைத்த மனிதர்கள் நாம்
ஊரினை உறவினை தேடுகின்றோம் 2
திசைகள் தோறும் சிதறி நின்றோம் 2
மாவீரர் உங்களை வணங்குகின்றோம் 2

கார்கால மழையே கருமுகில் திரளே
ஈர விழிகளின் துளிகள் தெரிகிறதா 2

எமக்காய் எமக்காய் தமை தந்தாய்
ஏந்தைகள் உயிர்களை காவு தந்தாய் 2
தாய்தமிழ் அன்னையை நெஞ்சினிலே
சுமந்தவர் எங்கள் மறவரடி 2
வேந்தனர் தம்மை விசையாகி 2
செந்தணல் புகுந்த வீரரடி 2

கார்கால மழையே கருமுகில் திரளே
ஈர விழிகளின் துளிகள் தெரிகிறதா 2

இசைத் தட்டு : சிட்டுக்களின் ஈழ மெட்டுக்கள்
பதிப்பகம் : அகம்